உதவி அமர்வு நீதிமன்றம்/சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.

எஸ்சி எண் 204/2016

| | | |
|---|---|---|
| பெயர் | .. | கிரேஸ்சோபியாபாய்(அசா11) |
| த/பெ. க/பெ | .. | |
| கிராமம் | .. | |
| தாலுகா | .. | |
| தொழில் | .. | |
| ஜாதி | .. | |
| மதம் | .. | |
| வயது | .. | |

1873 ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2023 ஆண்டு ஜுன் மாதம் 14 ம்நாள் இந்நீதிமன்ற உதவியாளர் அவர்களால் மேற்படியாரிடம் சத்திய பிரமாணம் பெறப்பட்டது.
14–06–2023

**முதல் விசாரணை**

நான் தற்போது அருப்புக்கோட்டை நகர் காவல்நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளராகபணிபுரிந்து வருகிறேன். 23.8.2015 தேதி சங்கரலிங்கபுரம் காவல்நிலையத்தில் காலை 6.15 மணிக்கு நான் சார்பு ஆய்வாளராக நிலையபொறுப்பில் இருந்தபோது கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் வான்செய்தி மூலம் கிடைக்கப்பெற்றதகவலின் அடிப்படையில் கோவில்பட்டி அரசு மருத்து மனைக்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கிருஷ்ணமூர்த்தி 60 த/பெசுப்பிமணியபிள்ளை 5 வெங்கட்ராமன் 2 வது தெரு அம்பத்துார் சென்னை என்பவர் கொடுத்த வாக்கு்முலங்ததை பெற்றுவந்து சங்கரலிங்கபுரம் கா.நி.கு.எண்.84/2015 பிரிவுகள் 448, 294(பி)324,307,ஐபிசியாக காலை 9.00 மணிக்கு வழக்கு பதிவுசெய்து வாதியின் வாக்குமூலத்தையும் முதல்தகவல் அறிக்கையும் கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் விளாத்திகுளம் அவர்களுக்கு அனுப்பிவைத்தேன். மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தேன். ஒருநகலை மேல்விசாரணைக்காக மாசார்பட்டி கா.நிலைய ஆய்வாளர் அவர்களுக்கு ஒப்படைத்தேன். இந்த வழக்கில் பதிவுசெய்யப்பட்ட முதல் தகவல்அறிக்கை அசாஆ.6 ஆக பதிவுசெய்யப்படுகிறது.

கு.வி.

என்னிடம்காட்டப்படும் முதல்தகவல் அறிக்கையுல் கலம்எண்.3 ல் தகவல் கிடைத்த நாள் 23.8.2015 என்றும் நேரம் 9.00 மணி என்றும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அது முதல்தகவல் அறிக்கை பதிவுசெய்தநேரமாகும். எங்களுக்கு தகவல் 23.8.2015 தேதி காலை 6.15 மணியளவில் கிடைத்துவிட்டது. மேற்படி தகவல் அன்றையதினம் காலை 6.15 மணிக்கு கிடைத்ததாக முதல்தகவல்அறி'கையில் துலங்காது என்றால்சரிதான். கோவில்பட்டி அரசுமருத்துவமனைக்கும் சங்கரலிங்கபுரம் காவல்நிலையத்திற்கு சுமார் 35 கிலோமீட்டர்துரம் இருக்கும். கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் புறக்காவல்நிலையம் செயல்பட்டு வருகிறது என்றால்சரிதான். மேற்படி புறக்காவல்நிலையத்தில் இருந்துதான் வான்செய்திமூலமாக எங்களுக்கு செய்தி கிடைத்தது. காவல்நிலையத்தில் பொதுநாட்குறிப்பேடு பராமரிக்கப்பட்டு வருகிறது என்றால்சரிதான். அன்றையதினம் நான் கோவில்பட்டிக்கு வந்தேன் என்பதை மேற்படி பொதுநாட்குறிப்பேட்டில் குறிப்பிட்டுள்ளேன் என்றால்சரிதான். மேற்படி பொதுநாட்குறிப்பேட்டை தற்போது தாக்கல்செய்யமுடியுமா என்றால் அது தற்போது எங்கள் கைவசம் இல்லை. சங்கரலிங்கபுரம் காவல்நிலையத்திற்கும் விளாத்திகுளம் நடுவர் நிதித்துறை நீதிமன்றத்திற்கும் சுமார் 15 கிலோமீட்டர் தூரம் இருக்கும். முதல் தகவல் அறிக்கை மிகவும் முக்கியஆவணம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் முதல்தகவல் அறிக்கையில் அசா1 க்கு அதிககடன் சுமை இருந்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். மேலும் அசஆ 1 புகாரில் அசா1 மனைவியின் பெயரில் அசா1 மாமனார் உயில்எழுதிவைத்தாக சொல்லப்படவில்லை என்றால் சொத்து எழுதிகொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது. புகாரில் எதிரி வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்ததாக சொல்லப்படவில்லை என்றால்சரியல்ல. கனகலட்சுமி மற்றும் குழந்தை அலறல் சத்தம் கேட்டு அசா1 ஓடிவந்ததாக புகாரில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. புகாரில் அசா1 ன் மனைவியின் கழுத்தைநோக்கி எதிரி வெட்டியதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். சொன்னமாதிரி சொன்னதேதியில் சொன்னநேரத்தில் கோவில்பட்டி அரசுமருத்துவமனைக்கு வந்ததாகவும், அசா1 னிடம் புகார் வாக்குமூலம் பெற்றதாகவும், அதன்அடிப்படையில் முதல்தகவல் அறிக்கை பதிவுசெய்ததாகவும், பொய்யாக சொல்கிறேன் என்றால்சரியல்ல. நான் தவறான

முதல்தகவல்அறிக்கை எதிரியின்மீது பொய்புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவுசெய்துள்ளேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்)R.Rathinavel Pandian
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி